1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, தேனீ வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 89 பேர் வாரியத்தால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 1977-78 ஆம் ஆண்டு முடிய கிட்டத்தட்ட ரூ. 1,03,000 மதிப்புள்ள தேனை உற்பத்தி செய்கின்ற பணியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் பல்வேறு பணிகளிலே இயற்கையாக அவர்களை ஈடுபடுத்த முடியாது. ஆனால், கதர் விற்பனையின் பொழுது அவர்களது பணி சிறிதளவு பயன்படுத்தப்படுகிறது என்பது தான் உண்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரத்தில் மருத்துவமனைக் கட்டிடம்.

* வினா எண். 57—திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனி தாலுகாவில் உள்ள ஒட்டன்சத்திரத்தில் ஒரு பொது ஆஸ்பத்திரி (General Hospital) கட்ட 1970-ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், ஆஸ்பத்திரி கட்ட நடப்பு ஆண்டில் நடவடிக்கை எடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

மருத்துவக் கல்லூரிகள்.

*வினா எண். 58—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் மருத்துவக் கல்லூரிகள், அரசு நடத்தும் மருத்துவக் கல்லூரிகள் முறையே எத்தனை?

(ஆ) அரசு கல்லூரிகளில் மாணவர்கள் தேர்ந்தெடுப்பதைப் போலவே தனியார் கல்லூரிகளில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா?

(இ) இல்லை என்றால் அதற்கான காரணம் யாது?

(ஈ) தனியார் கல்லூரிகளுக்கு மான்யம் ஏதேனும் கொடுக்கப்படுகிறதா? எவ்வளவு?